# Study visit of the Standing Committee on Social Justice & Empowerment-20th to 22nd November 2021



மாமல்லபுரத்தில் சமூக நலத்துறையின் நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் வெண்ணை உருண்டைக்கல் புராதன சின்னத்தை சுற்றி பார்த்தபோது எடுத்த படம்.

## மாமல்லபுரம் வந்த நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள்

### புராதன சின்னங்களை சுற்றி பார்த்தனர்

மாமல்லபுரம், நவ.23-
மாமல்லபுரம் வருகை தந்த நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் புராதன சின்னங்களை சுற்றி பார்த்தனர்.

#### நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள்

வட இந்தியாவை சேர்ந்த 6 மாநிலங்களில் இருந்து மத்திய சமூக நலத்துறையின் நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் 18 பேர் ஸ்ரீமதி ரமாதேவி தலைமையில் நேற்று மாமல்லபுரம் வந்தனர்.

அவர்கள் வெண்ணை உருண்டைக்கல், ஐந்துரதம், அர்ச்சுனன் தபசு உள்ளிட்ட முக்கிய புராதன சின்னங்களை சுற்றிப்பார்த்து ரசித்தனர். அவர்களுக்கு மாமல்லபுரம் பல்லவர் கால வரலாற்று சிற்பங்கள் பற்றிய தகவல்களை சுற்றுலா வழிகாட்டி ஒருவர் விளக்கி கூறினார்.

#### புகைப்படம் எடுத்தனர்

வெண்ணை உருண்டைக்கல் முன்பு 18 உறுப்பினர்களும் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் அங்கிருந்து சுற்றிபார்த்துவிட்டு... அங்கு பாசிமணி விற்றுக் கொண்டிருந்த பெண்களை சில பெண் எம்.பி.க்கள் அழைத்து அவர்களிடம் பாசிமணி வாங்கி ... பதை காண முடிந்தது.

## மாமல்லபுரம் வந்த நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள்

## ...புரத்தில் நரிக்குறவ பெண்ணிடம் ...ணி வாங்கிய நாடாளுமன்ற நிலைக்குழுவினர்



...ன்ற நிலைக்குழு பெண் உறுப்பினர் ஒருவர், நரிக்குறவப் பெண்ணிடம் பாசமணி வாங்குகிறார்.

சென்னை, நவ. 22: மாமல்லபுரத்தில் நேற்று நாடாளுமன்ற நிலைக்குழுவினர் வந்து புராதன சின்னங்களை சுற்றி பார்த்தனர். அப்போது, நரிக்குறவப் பெண்ணிடம் பாசிமணியை ஆர்வமுடன் வாங்கி சென்றனர்.

டெல்லியில் இருந்து நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் 18 பேர் நேற்று மாலை 6 மணிக்கு மாமல்லபுரம் வந்தனர். பின்னர், அவர்கள் வெண்ணெய் உருண்டை பாறை, அர்ச்சுனன் தபசு, ஐந்து ரதம், கடற்கரை கோயில் உள்ளிட்ட புராதன சின்னங்களை பார்வையிட்டு, ஆய்வு செய்தனர்.

வெண்ணெய் உருண்டை பாறை முன்பு நின்று குழுப் புகைப்படம் எடுத்தனர்.

இங்குள்ள மூத்த சுற்றுலா வழிகாட்டி ஒருவர் மாமல்லபுரத்தின் சிறப்பு குறித்து விளக்கிக் கூறினார்.

இதையடுத்து, வெண்ணெய் உருண்டை பாறை வெளியே காரில் ஏற வந்த நிலைக் குழுவினர் அங்கு பாசிமணி விற்றுக் கொண்டிருந்த நரிக்குறவ பெண்ணை அழைத்து ஆர்வமுடன் பாசிமணி வாங்கி சென்றனர்.